**ஏப்ரல் – 30**

# TNPSC துளிகள்

- கடந்த நிதியாண்டில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 100க்கும் மேற்பட்ட உள்ளார்ந்தத் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை வழி நடத்தி மேம்படுத்தியுள்ளது.
    - கடந்த 12 ஆண்டுகளில், இந்தக் கழகத்தின் தொழில்நுட்பக் காப்பகப் பிரிவு ஆனது, ஒட்டு மொத்தமாக 50,000 கோடி ரூபாய் மதிப்பிலான 457 உள்ளார்ந்தத் தொழில் நுட்பம் சார் புத்தொழில் நிறுவனங்களை ஆதரித்துள்ளது.
- கும்பகோணத்தில் அமைக்கப்பட உள்ள கலைஞர் பல்கலைக்கழகத்தின் வேந்தராக தமிழக முதல்வரையும், மாநில உயர்கல்வி அமைச்சரை அதன் துணைவேந்தராகவும் நியமிக்கும் தமிழக அரசு மசோதாவை முன்மொழிந்துள்ளது.
- சர்வதேச நாடக நிறுவனம் (ITI) ஆனது, உலகளவில் பல்வேறு வகையான நடனங்களை ஊக்குவிப்பதற்காக 1982 ஆம் ஆண்டிலிருந்து ஏப்ரல் 29 ஆம் தேதியினைச் சர்வதேச நடன தினமாக அனுசரித்து வருகிறது.
- யுனெஸ்கோ மற்றும் இதர பிற அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஜாஸ் தினம் ஆனது ஏப்ரல் 30 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது என்ற ஒரு நிலைமையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி நகரானது இந்த ஆண்டிற்கான இத்தினக் கொண்டாட்டத்தினை ஏற்பாடு செய்தது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மக்களைத் தேடி மருத்துவம் (MTM) திட்டத்தின் தாக்கம்

Effective initiative

The table shows the number of beneficiaries under the *Makkalai Thedi Maruthuvam* (MTM) till March 31, 2025

| Service | First-time beneficiaries | Repeat beneficiaries |
|---|---|---|
| Hypertension | 1,13,77,200 | 1,73,08,450 |
| Diabetes | 54,19,368 | 1,24,16,468 |
| Both hypertension and diabetes | 49,40,439 | 1,03,51,762 |
| Palliative care | 6,04,413 | 13,46,585 |
| Physiotherapy | 8,07,545 | 30,07,716 |
| Continuous ambulatory peritoneal dialysis bags | 488 | 8,476 |

Comparison of non-communicable diseases control between STEPS I and II surveys

| NCD | STEPS I (2019-20) | STEPS II (2023-2024) |
|---|---|---|
| Hypertension | 7.30% | 17.00% |
| Diabetes | 10.80% | 16.70% |



SOME HIGHLIGHTS

- The proportion of individuals with hypertension seeking care in government facilities rose from 45.5% in STEPS I to 62.4% in STEPS II
- 37.7% of individuals with hypertension received drugs through women health volunteers (WHVs) at their homes through MTM
- Among those with diabetes, 54.1% sought treatment from the government sector in 2023-24s when compared to 33.9% in 2019-20
- Among those with diabetes, 33.6% received drugs through WHVs at their homes

- தமிழ்நாட்டின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டமானது வயது வந்தோரிடையே ரத்த அழுத்த மேலாண்மை 17 சதவீதமும், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 16.7 சதவீதமும் மேம்பட்டுள்ளதுடன், சிறப்பான சுகாதாரச் சேவைகளுக்கு வழி வகுத்துள்ளது.

- 2023-2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு STEPS (NCD ஆபத்துக் காரணிக் கண்காணிப்புக்கான உலக சுகாதார அமைப்பின் STEPS அணுகுமுறை) என்ற கணக்கெடுப்பிலிருந்து இந்தத் தகவல் தெரிய வந்துள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையின் தேசிய தொற்றுநோயியல் நிறுவனத்தினால் (ICMR-NIE) இது மேற்கொள்ளப்பட்டது.

## தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாடு 2025 – சென்னை





- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கத் திட்ட அமைப்பானது (StartupTN) இந்த உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- இந்த உச்சி மாநாடானது, SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனத்துடன் இணைந்து தி இந்து இதழால் நடத்தப்பட்டதோடு, Sify Technologies நிறுவனத்துடன் இணைந்து StartupTN அமைப்பினால் தொகுத்தும் வழங்கப்பட்டது.
- StartupTN அமைப்பினால் கோயம்புத்தூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உலகளாவிய புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாட்டிற்கான” முத்திரை மற்றும் வலைதளத்தை துணை முதல்வர் வெளியிட்டார்.
- திறன் வளங்களின் அடிப்படையில், ஆசியாவின் முதல் 10 பிராந்தியங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாக உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது, அதன் வலுவான மிகப்பெரும் ஆற்றலின் பிரதிபலிப்பாக தமிழகத்தினைப் புத்தாக்கச் சூழல் அமைப்பிற்கான ஒரு முன்மாதிரியாக குறிப்பிட்டு உள்ளது.
- சென்னை நகரமானது மென்பொருள் சேவைகளின் தலைநகரம் என்று அழைக்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு புத்தொழில் நிறுவனங்கள் அறிக்கையில் சென்னை 18வது இடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- பல நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களாக வளர்கின்றன, ஆனால் அவ்வாறு வளரும் போது சிறந்த நிர்வாக நடைமுறைகளைக் கற்பதில்லை என்பதால் புத்தொழில் நிறுவனங்கள் மூடப்படும் விகிதம் மிக அதிகமாக உள்ளது.
- சென்னையில் துணிகர மூலதன சூழல் அமைப்பு இல்லை என்பது மற்றொரு முக்கியப் பிரச்சினையாக உள்ளது.
- தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கத் திட்டம் (StartupTN) ஆனது, இந்த ஆண்டு கிராமம் தோறும் புத்தொழில் நிறுவனங்கள் (கிராமங்களில் புத்தொழில் நிறுவனங்களை நிறுவுதல்) என்ற திட்டத்தைத் தொடங்க உள்ளது.

- இது உள்ளடக்கிய வகையிலான தொழில்முனைவு, கிராமப்புறப் புத்தாக்கம் மற்றும் நிலையான பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இந்தக் கொள்கையானது பாலின உள்ளடக்கம், சாதி உள்ளடக்கம் மற்றும் புவியியல் உள்ளடக்கம் ஆகிய மூன்று மிகவும் முக்கியமான உள்ளடக்கிய அம்சங்களில் கவனம் செலுத்துகிறது.
- 2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசானது புத்தொழில் நிறுவனத்திற்கான இந்திய அரசின் ஒரு வரையறையை சிறிது மாற்றியமைக்கும் ஒரு கொள்கையை அறிமுகப் படுத்தியது.
- மத்திய அரசானது, தொடங்கி 10 ஆண்டுகளுக்கும் குறைவான ஆண்டுகளே ஆன 100 கோடி ரூபாய்க்கும் குறைவான இலாபம் கொண்ட நிறுவனத்தினை ஒரு புத்தொழில் நிறுவனமாக வரையறுக்கிற அதே சமயத்தில், தமிழ்நாட்டின் கொள்கை இதற்கான வருவாய் வரம்பை 50 கோடி ரூபாயாக திருத்தியமைத்தது.

# தேசியச் செய்திகள்

## புதியக் கண்டத் திட்டு மீதான உரிமை கோரல்





- இந்தியா தனது 'பரந்து விரிந்த கண்டத்திட்டுகளின்' ஒரு பகுதியாக, மத்திய அரேபியக் கடலில் தனது உரிமை கோரலை சுமார் 10,000 சதுர கி.மீ. வரை அதிகரித்துள்ளது.
- இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் சார் எல்லை தொடர்பாக பாகிஸ்தானுடனான நீண்டகால சர்ச்சையைத் தவிர்ப்பதற்காக அரசு தனது முந்தைய கோரலையும் மாற்றி அமைத்துள்ளது.
- கடலோர நாடுகள் ஆனது, அவற்றின் கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் வரை பிரத்தியேகச் சுரங்க மற்றும் மீன்பிடி உரிமைகளை வழங்குகின்ற ஒரு 'பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தைக்' கொண்டுள்ளன.
- இது தவிர அத்தகைய நாடுகள், கண்டத் திட்டுகளின் எல்லை வரம்புகள் குறித்த ஆணையம் (CLCS) எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பிடம் அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடிந்தால், கடல் பரப்பில் அதிக பரப்பளவின் மீது உரிமையைக் கோரலாம்.
- இதற்காக உரிமை கோரப் பட்டப் பகுதியானது அந்த நாட்டின் நிலப்பரப்பிலிருந்து கடல் படுகை வரை இடைவெளி இல்லாமல் நீண்டு காணப்பட வேண்டும்.
- இந்தியா ஏற்கனவே 12 கடல் மைல் அளவிலான பிராந்திய கடலையும், அடிப்படை

வரம்பு எல்லையிலிருந்து அளவிடப்பட்ட பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்களின் 200 கடல் மைல்களையும் கொண்டுள்ளது.

- இந்தியாவானது வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் மற்றும் அரேபியக் கடல் வரை பரந்து விரிந்த கடல் பரப்புகளில் 2009 ஆம் ஆண்டில் தனது முதல் உரிமை கோரலை முன்வைத்தது.
- அரேபியக் கடலில் உள்ள கண்டத்திட்டுகள் மீதான இந்திய உரிமை கோரல்களின் சில பகுதிகள் ஓமன் நாட்டின் கோரல்களுடன் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடுகின்றன.
- இருப்பினும், இரு நாடுகளும் 2010 ஆம் ஆண்டு முதல் ஓர் ஒப்பந்தத்தில் இணைந்து உள்ளன எனவே அவற்றுக்கிடையேயான கண்டத் திட்டு ஆனது சர்ச்சைக்குரியதாக அல்லாமல், இன்னும் எல்லை வகுக்கப்படாமல் உள்ளது.
- ஆனால், குஜராத்தில் உள்ள ரான் ஆஃப் கட்ச்சின் சதுப்பு நிலங்களில் உள்ள சர் க்ரீக் (கடற்கழி) என்ற நீர்ப் பகுதி தொடர்பாக பாகிஸ்தானுடன் ஒரு தகராறு என்பது நிலவி வருகிறது.

## இந்தியாவின் வறுமை நிலை குறித்தப் புள்ளி விவரங்கள் (2011-2023)





- உலக வங்கியின் தரவுகளின்படி, 2011-12 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டுகளில் இந்தியா 171 மில்லியன் மக்களை மிகவும் தீவிரமான வறுமை நிலையிலிருந்து மீட்டுள்ளது.
- The World Bank's Spring 2025 Poverty and Equity Brief என்பது இதனைச் சுட்டிக் காட்டுகிறது.
- 2011-12 ஆம் ஆண்டில் 16.2 சதவீதமாக இருந்த தீவிர வறுமை நிலை (ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவாக வருமானத்தில் வாழ்தல்) ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 2.3 சதவீதமாகக் குறைந்தது.
- கிராமப்புறங்களில் நிலவும் தீவிர வறுமை நிலையானது 18.4 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் நிலவும் தீவிர வறுமை நிலை 10.7 சதவீதத்திலிருந்து 1.1 சதவீதமாகவும் குறைந்தது.
- இந்தியா கிராமப்புற-நகர்ப்புற இடைவெளியை ஆண்டிற்கு சுமார் 16 சதவீத அளவில் குறைத்து 7.7 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதப் புள்ளிகள் குறைத்தள்ளது.
- ஒரு நாளைக்கு சுமார் 3.65 டாலர் என்ற குறைவான நடுத்தர வருமானம் கொண்ட பிரிவிற்கான வறுமைக் கோட்டு வரம்பின் படி, வறுமை நிலையானது சுமார் 61.8 சதவீதத்திலிருந்து சுமார் 28.1 சதவீதமாகக் குறைந்து, சுமார் 378 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது.
- இந்தியாவின் ஐந்து மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களான உத்தரப்

பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்காளம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை 2011-12 ஆம் ஆண்டில் நாட்டின் தீவிர ஏழ்மை நிலையில் சுமார் 65 சதவீதப் பங்கைக் கொண்டிருந்தன.

- 2022-23 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்தத் தீவிர வறுமைக் குறைப்பில் மூன்றில் இரண்டு பங்கை அவைக் கொண்டிருந்தன.
- இந்த மாநிலங்களில் இன்றும் இந்தியாவின் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சுமார் 54 சதவீதத்தினரும் (2022-23) பல பரிமாண ஏழ்மை நிலையில் உள்ள 51 சதவீதத்தினரும் (2019-21) வாழ்கின்றனர்.

# சர்வதேசச் செய்திகள்

## சோலிஸ்தான் கால்வாய் திட்டம் இடைநிறுத்தம்




- சிந்து மாகாணத்தில் பல வாரங்களாக நடைபெற்று வந்த போராட்டங்களுக்குப் பிறகு, பாகிஸ்தான் நாட்டின் அரசாங்கம் அதன் ஒரு இலட்சிய நோக்கமிக்க கால்வாய்கள் கட்டமைப்புத் திட்டத்தினை இடைநிறுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது இதற்கு முன்னர் பயிரிடப்படாத மில்லியன் கணக்கான ஏக்கர் பரப்பிலான நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.
- கால்வாய்கள் கட்டமைப்புத் திட்டம் ஆனது, 3.3 பில்லியன் டாலர் மதிப்பிலான பெரிய பசுமை பாகிஸ்தான் முன்னெடுப்பின் மையக்கருவாகும்.
- இது தெற்குப் பஞ்சாபில் உள்ள சோலிஸ்தானின் வறண்ட நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக 176 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் ஆகும்.
- இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ள சோலிஸ்தான் தார் பாலைவனத்தின் ஒரு பகுதியாகும்.
- மிகவும் ஒரு அதிகாரப்பூர்வமாக, சோலிஸ்தான் கால்வாய் ஆனது சட்லெஜ் நதியில் இந்தியாவினால் திறந்து விடப்படும் வெள்ள நீரால் நீரைப் பெற இருந்தது.
- 2018-19 ஆம் ஆண்டில், சிந்து மற்றும் அதன் ஐந்து துணை நதிகளிலிருந்து நாட்டிற்குக் கிடைத்த நீரில் சுமார் 3.4% மட்டுமே (4.9 மில்லியன் ஏக்கர் அடி) இந்திய அரசினால் கட்டுப்படுத்தப்படும் சட்லெஜ், பியாஸ் மற்றும் ராவி ஆகிய மூன்று "கிழக்கு நதிகளில் இருந்து" பெறப்பட்டதாகும்.

## அட்லாண்டா நடவடிக்கை 2025

- EUNAVFOR ATALANTA (அட்லாண்டா நடவடிக்கை) என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு கடற்படை நடவடிக்கையாகும்.

- இது Common Security and Defence Policy (CSDP) என்பதின் கீழ் நடத்தப்படுகிறது.
- இது முதன்மையாக மேற்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் செங்கடலில் இயங்குகிறது.
- இது பாப்-எல்-மண்டேப் ஜலசந்தி மற்றும் ஏடன் வளைகுடா போன்ற முக்கியமான கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் பாதுகாப்பை மேம்படுத்துகிறது.
- EUNAVFOR ஆனது, கடற்கொள்ளைச் சம்பவங்களுக்கு 48 முதல் 72 மணி நேரத்திற்குள் எதிர் நடவடிக்கை எடுக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- மேற்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் செங்கடலில் கடல்சார் மீதான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியக் கடற்படையுடன் இணைந்து கூட்டுக் கடற்படைப் பயிற்சியை மேற்கொள்வதற்கு இது முன்மொழிந்துள்ளது.




## மாநிலச் செய்திகள்


### அமராவதி விமான நிலையம்




- மகாராஷ்டிர மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள அமராவதி விமான நிலையத்தினை மகாராஷ்டிர முதல்வர் திறந்து வைத்தார்.

- இது UDAN (உடே தேஷ் கா ஆம் நாக்ரிக்) பிராந்தியப் போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின் (RCS) கீழ் நிறுவப்பட்டது.
- மேலும் அவர் விதர்பாவின் அமராவதி நகரில், விமான/விமானி பயிற்சி நிறுவனம் (FTO) நிறுவப்பட உள்ளதாகவும் அறிவித்தார்.
- இது தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரியதான விமானிப் பயிற்சி நிறுவனமாக இருக்கும்.

## குஜராத் வரம்பு மற்றும் வர்த்தக அமைப்பில் வெற்றி




- நுண்துகள் உமிழ்வுகள் தொடர்பான வர்த்தகத்திற்கான உலகின் முதல் சந்தையானது, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்குவதாக இந்தியாவில் மேற் கொள்ளப் பட்ட ஒரு புதிய ஆய்வுக் கண்டறிந்துள்ளது.
- இந்தத் திட்டமானது, தொழில்துறை மாசுபாட்டைக் குறைத்துள்ளது, ஆலைகளுக்கான செலவினங்களைக் குறைத்துள்ளது மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளுடனான ஒரு இணக்கத்தினையும் மேம்படுத்தியுள்ளது.
- உமிழ்வு வர்த்தக திட்டம் (ETS) என்பது நுண்துகள் மாசுபாட்டிற்கான ஒரு வரம்பு மற்றும் வர்த்தக அமைப்பாகும்.
- இந்தத் திட்டமானது ஒரு முக்கிய தொழில் மையமான குஜராத்தின் சூரத் நகரில் தொடங்கப் பட்டது.
- இது சிகாகோ பல்கலைக்கழகத்தில் உள்ள எரிசக்திக் கொள்கை நிறுவனத்துடன் இணைந்து குஜராத் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் (GPCB) ஒரு சோதனைத் திட்டமாக உருவாக்கப்பட்டது.
- இத்திட்டம் ஆனது ஐந்தாண்டுகளுக்கு மேல் அமல்படுத்தப்படும்.
- இது உலகில் நுண்துகள் உமிழ்வு வர்த்தகத்திற்கான முதலாவது மற்றும் இந்தியாவின் முதல் மாசுபாட்டு உமிழ்வு வர்த்தகத் திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், 318 நிலக்கரியைப் பயன்படுத்தும் பெரும் தொழிற்சாலைகளில் நுண்துகள் உமிழ்வின் நிகழ்நேரக் கண்காணிப்பினை அனுமதிக்கின்றத் தொடர்ச்சி ஆன உமிழ்வுக் கண்காணிப்பு அமைப்புகளை (CEMS) நிறுவ வேண்டும் என்று

வலியுறுத்தப்பட்டது.

- இது முன்னதாக மேற்கொள்ளப்பட்ட ஒரு வருடாந்திரச் சோதனை முறையினை மாற்றி அமைத்தது.
- தொழிற்சாலைகளுக்கு உமிழ்வு வரம்புகள் ஒதுக்கீடு செய்யப் படுகின்றன அல்லது உமிழ்வு அனுமதிகளை வாங்க அனுமதிக்கப் படுகின்றன என்பதோடு இவை ஒவ்வொன்றும் 1 கிலோகிராம் நுண்துகள்களை வெளியிடுவதற்கான ஒரு உரிமையை வழங்குகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## மேக்கிரிகோர் நினைவுப் பதக்கங்கள் – இந்தியா




- இது இராணுவ உளவு மற்றும் சாகசப் பணிகளில் மகத்தான பங்களிப்புகளை ஆற்றிய வீரர்களை அங்கீகரிக்கும் ஒரு மதிப்புமிக்க விருதாகவும், இந்திய ஆயுதப் படைகளில் வழங்கப்படும் கௌரவச் சின்னமாகவும் விளங்குகிறது.
- 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஐந்து இராணுவ வீரர்களுக்கு அவர்களின் பெரும் சாதனைகளுக்காகப் பாதுகாப்பு அமைச்சகத்தின் இந்த விருதினைப் பெற்றுள்ளனர்.
- இந்த விருதானது தேசியப் பாதுகாப்பிற்குப் பங்களிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பணியாளர்களை ஊக்குவிக்கிறது.
- இராணுவ உளவு மற்றும் ஆய்வு ஆகியவை இந்தப் பதக்கத்திற்கான முதன்மையான ஒரு அளவுருவாக இருந்தாலும், இந்தப் பதக்கமானது ஆயுதப் படைகள், பிராந்திய இராணுவம், சேமப் படைகள், இராஷ்ட்ரிய ரைபிள்ஸ் மற்றும் அசாம் ரைபிள்ஸ் ஆகிய அனைத்துப் பிரிவுகளின் அனைத்து நிலைப் பதவியினருக்கும் (பணியாற்றும் மற்றும் ஓய்வு பெற்ற) வழங்கப்படுகிறது.
- 1888 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்த மேக்ரிகோர் நினைவுப் பதக்கமானது, இந்திய ஒருங்கிணைந்தப் படைகள் நிறுவனத்தின் (USI) (1870 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது) நிறுவனரான மேஜர் ஜெனரல் சர் சார்லஸ் மெட்கால்ஃப் மெக்ரிகோரை நினைவுகூருகிறது.
- முதலில் இராணுவ உளவு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்காக என்று உருவாக்கப்பட்ட இந்தப் பதக்கமானது, சுதந்திரத்திற்குப் பிறகு 1986 ஆம் ஆண்டில் பின்னர் ராணுவச் செயல்பாடு சார் பயணங்கள் மற்றும் சாகச நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்டது.
- சுதந்திரத்திற்கு முன்பு வழங்கப்பட்ட சுமார் 103 பதக்கங்கள் உட்பட இன்று வரை 127

பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- இந்தப் பதக்கமானது கேப்டன் F.E. யங்ஹஸ்பாண்ட் (1890), மேஜர் ஜெனரல் ஆர்டே சார்லஸ் விங்கேட் (1943), மேஜர் Z.C. பக்ஷி (1949), சியாச்சின் பனிப்பாறை ஆய்வுக்காக கர்னல் நரிந்தர் குமார் (1978–81) மற்றும் தனித்த உலகப் பயணத்திற்காக கமாண்டர் (படைத் தளபதி) திலீப் டோண்டே மற்றும் லெப்டினன்ட் கமாண்டர் (படைத் துணைத் தளபதி) அபிலாஷ் டோமி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தப் பதக்கத்தினைப் பெற்றவர்களில் விமானப் படையைச் சேர்ந்த விமானப் படைத்தளபதி D. பாண்டா மற்றும் கடற்படையைச் சேர்ந்த விமான மின்னியல் பராமரிப்பாளர் (ரேடியோ) கீழ்நிலை அதிகாரி ராகுல் குமார் பாண்டே ஆகியோர் அடங்குவர்.
- 2024 ஆம் ஆண்டில், கடற்படையின் தலைமை விமான மின்னியல் பராமரிப்பாளர் (ரேடியோ) ராம் ரத்தன் ஜாட் மற்றும் விமானப்படை கீழ்நிலை அதிகாரி ஜுமர் ராம் பூனியா ஆகியோர் இந்தப் பதக்கத்தினைப் பெற்றனர்.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள தேசிய மலையேறுதல் மற்றும் சாகச விளையாட்டுகள் கழகத்தின் இயக்குநர் கர்னல் ரன்வீர் சிங் ஜம்வால் அவர்களுக்கும் இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது.
- இந்த முக்கிய நிகழ்வில் ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படையின் முன்னாள் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் துவா (ஓய்வு) எழுதிய நைப் சுபேதார் சன்னி லாலின் வாழ்க்கை மற்றும் வீரப் பயணத்தினை எடுத்துரைக்கும் Bravest of the Brave என்ற ஒரு வரலாற்றுப் புத்தகத்தின் வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12




- இத்தினமானது கடந்த காலச் சாதனைகள் மற்றும் பேரண்டத்தினை ஆராய்வதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் ஆகிய இரண்டையும் நன்கு போற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று, சோவியத் ஒன்றிய விண்வெளி வீரர் யூரி ககாரின், வோஸ்டாக் 1 ஏவுகலத்தில் விண்வெளிக்குப் பயணித்த முதல் மனிதர் என்ற

வரலாற்றைப் படைத்தார்.

- இந்த சிறப்புமிக்க நிகழ்வை அங்கீகரிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையானது இந்த நாளை அறிவித்தது.
- பொதுவாக, கர்மன் கோடு ஆனது கடல் மட்டத்திலிருந்து 100 கிலோ மீட்டர் (62 மைல்) உயரத்தில் அமைந்துள்ளது.
- இது புவியின் வளிமண்டலத்தினை விண்வெளியில் இருந்து பிரித்து வரையறுக்கும் ஒரு கற்பனைக் கோடாகும்.
- கர்மன் கோட்டிற்கு மேலே பயணிக்கும் எந்தவொருக் கட்டமைப்பிற்கும் புவியின் வளி மண்டலத்தினால் உருவாக்கப்படும் உந்து விசையினைச் சார்ந்திருக்காத உந்துவிசை அமைப்பு தேவைப்படுகிறது.

## சர்வதேச தெருவோரக் குழந்தைகள் தினம் - ஏப்ரல் 12




- இந்தத் தினமானது தெருவோரங்களில் வாழும் குழந்தைகளின் பல உரிமைகளைப் புறக்கணிக்க முடியாததை உறுதிப்படுத்தும் வகையில் குரல் கொடுக்கிறது.
- யுனிசெஃப் அமைப்பானது தெருவோரக் குழந்தைகளை மூன்று பரந்தப் பிரிவுகளாகப் பிரித்துள்ளது:
  - தெருவோரங்களில் வேலை செய்யும் குழந்தைகள்: தங்கள் மிகப் பெரும்பாலான நேரத்தைத் தெருக்களில் செலவழித்து, தங்களைத் தற்காத்துக் கொண்டு, ஆனால் தவறாமல் வீடு திரும்பும் குழந்தைகள்.
  - குடும்பத்தோடுத் தெருவில் வாழும் குழந்தைகள்: பெயர் குறிப்பிடுவது போல, குடும்பத்துடன் தெருக்களில் வாழும் குழந்தைகள்.
  - தெருவோரங்களில் வாழும் குழந்தைகள்: தங்கள் குடும்பங்களை விட்டு வெளியேறி, தெருக்களில் வாழும் குழந்தைகள்.

## சியாச்சின் தினம் - ஏப்ரல் 13


- இத்தினமானது, 1984 ஆம் ஆண்டில் உலகின் மிக உயரமான போர்க் களத்தில் இந்திய ராணுவம் மேற்கொண்ட மேக்தூத் என்ற நடவடிக்கையினை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளில் தான், இந்தியப் படை வீரர்கள் பிலாஃபோண்ட் லா என்ற கணவாயில்

தரையிறங்கி, சியாச்சின் பனிப் பாறையின் முக்கியப் பகுதிகளைக் கைப்பற்றி, சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் ஓர் உத்திசார் முன்னேற்றத்தினை அடைந்தனர்.

- சியாச்சின் பகுதியானது, 1949 ஆம் ஆண்டு முதலான கராச்சி ஒப்பந்தத்தில் இருந்து இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சர்ச்சைக்குரிய ஒரு இடமாகத் திகழ்ந்து வருகிறது.




## நிழல்கள் இல்லா தினம் 2025 - ஏப்ரல் 24




- பெங்களூரு நகரானது ஏப்ரல் 24 ஆம் தேதியன்று நிழல்கள் இல்லாத ஒரு தினத்தைக் கண்ணுற்றது.
- சூரிய ஒளியானது, துல்லியமாக 90 டிகிரி கோணத்தில் விழும் என்பதால், நிழல் நேராக கீழ்நோக்கி விழும்,இதனால் இந்த நிகழ்வு ஏற்படுகிறது.


- நிலநடுக்கோட்டிற்கும் கடக ரேகைக்கும் (23.5°N அட்சரேகை) இடையில் அமைந்துள்ள ஒவ்வொரு நகரத்திலும் இந்த நிகழ்வு இது பொதுவாக நிகழ்கிறது.
- இது சூரியனின் வடக்கு மற்றும் தெற்கு நோக்கிய இயக்கங்களுக்கு ஏற்ப ஆண்டிற்கு இரண்டு முறை நிகழும்.
- எனவே இந்த நாளானது, வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாட்களில் நிகழ்கின்றது.

## உலக மலேரியா தினம் 2025 - ஏப்ரல் 25




- இத்தினம் ஆனது மலேரியாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அந்த நோயைக் கட்டுப்படுத்துதல், தடுத்தல், ஒட்டு மொத்தமாக நோயை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் உலக சுகாதார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட உலகளாவிய முன்னெடுப்பாகும்.
- மலேரியா என்பது பாதிக்கப்பட்ட பெண் அனோபிலிஸ் கொசுக்கள் கடிப்பதன் மூலம் பரவுகின்ற ஒட்டுண்ணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Malaria ends with us: Reinvest, Reimagine, Reignite" என்பதாகும்.

## உலகப் பென்குயின் தினம் 2025 - ஏப்ரல் 25




- இந்தத் தினமானது அடெலி பெங்குவின்களின் வடக்கு நோக்கிய இடம்பெயர்வுக்கான தொடக்கத்தைக் குறிக்கிறது.

- உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட 17 முதல் 20 வரையிலான பெங்குவின் இனங்களில் அடேலி பெங்குவினும் ஒன்றாகும்.
- குளிர்காலத்தில், அவை உணவிற்கான மிகவும் சிறந்த அணுகலுக்காக வடக்கு நோக்கி நகர்கின்றன என்பதோடு கோடைகாலத்தில், கூடு கட்டுவதற்காக அண்டார்டிகாவின் கடலோர கடற்கரைகளுக்கு அவை திரும்புகின்றன.
- அடையாளம் காணப்பட்ட சுமார் 17 இனங்களில், 10 இனம் இனங்கள் ஆனது IUCN அமைப்பினால் அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாக வகைப்படுத்தப் பட்டு உள்ளன மேலும் மூன்று இனங்கள் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் 2025 - ஏப்ரல் 25




- இத்தினமானது, உலகளாவிய ஒத்துழைப்பு, அமைதி மற்றும் அரசு முறை உறவுகளை வளர்ப்பதில் பிரதிநிதிகளின் முக்கியப் பங்கைக் கொண்டாடுகிறது.
- இது பெலாரஸ் நாட்டின் முன்னெடுப்பின் மூலம் 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது, ஐக்கிய நாடுகள் சபை நிறுவப் படுவதற்கு வழி வகுத்த 1945 ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்றச் சர்வதேச மாநாட்டின் முதலாவது நாளைக் குறிக்கிறது.

## சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம் 2025 - ஏப்ரல் 26




- 1986 ஆம் ஆண்டில் செர்னோபில் பேரழிவின் தாக்கங்கள் மற்றும் அணுசக்தியின் பல்வேறு அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த உக்ரைனில் உள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தில் உள்ள நான்காம் உலையானது 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் தேதியன்று வெடித்தது.
- மூன்று நாடுகளில் சுமார் 8.4 மில்லியன் மக்கள் அணுக் கதிர்வீச்சினால் பாதிக்கப் பட்டனர்.
- கதிரியக்க மாசுபாடு காரணமாக சுமார் 2,600 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பிலான சில பகுதிகள் (நிரந்தரமாக) மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்றதாக உள்ளது.

## உலக அறிவுசார் சொத்து தினம் 2025 - ஏப்ரல் 26




- இந்தத் தினமானது அறிவுசார் சொத்துகள் (IP) எவ்வாறு உலகளாவிய கலை சார்ந்த கண்டுபிடிப்புகள் செழிக்க உதவுகிறது மற்றும் மனித முன்னேற்றத்திற்கு உந்துதலாக அமையும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்குச் செயலூட்டுகிறது என்பதை எடுத்து உரைக்கிறது.
- காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள், தொழில்துறை வடிவமைப்புகள், பதிப்புரிமை போன்ற பல்வேறு அறிவுசார் சொத்து உரிமைகள் புதுமை மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிப்பதில் வகிக்கும் பங்கை இந்தத் தினமானது எடுத்துரைக்கிறது.
- 1970 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், WIPO உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Intellectual property and music: Feel the beat of IP" என்பதாகும்.

## உலக கால்நடைகள் தினம் 2025 - ஏப்ரல் 26




- இந்தத் தினமானது ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது, விலங்குகளின் ஆரோக்கியம், பொது நல்வாழ்வு மற்றும் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் கால்நடை மருத்துவர்கள் ஆற்றும் முக்கியப் பங்களிப்பை நன்கு

அங்கீகரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Animal Health Takes a Team" என்பதாகும்.

## உலக வடிவமைப்பு தினம் 2025 - ஏப்ரல் 27

- இது வடிவமைப்பு நுட்பத்தின் மதிப்பையும், மாற்றத்தினை ஏற்படுத்துவதில் அதன் திறனையும் அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1995 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகின்ற இந்தத் தினமானது 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் தேதியன்று சர்வதேச வடிவமைப்பு சபை நிறுவப்பட்டதை நினைவு கூர்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "outlandish optimism" என்பதாகும்.




## பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் 2025 - ஏப்ரல் 28




- இது உலகம் முழுவதும் பணியிட விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்கள் உருவாகும் வழிகளை எடுத்துரைத்து, அதனைத் தடுக்கிறது.
- இது சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது, ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பாக வீடு திரும்ப உரிமை உண்டு என்பதை அங்கீகரித்து, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Revolutionizing health and safety: the role of AI and digitalization at work' என்பதாகும்.

## ஆயுஷ்மான் பாரத் திவாஸ் 2025 - ஏப்ரல் 30




- இந்தத் தினமானது, ஆயுஷ்மான் பாரத் யோஜனாவின் நன்மைகள் குறித்த ஒரு விழிப்பு உணர்வை பரப்புவதற்காக அனுசரிக்கப்பட்டது.
- இந்த மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டம் ஆனது, இந்தியாவின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டங்களில் ஒன்றாகும்.
- இது இரண்டு முக்கிய தூண்களைக் கொண்டுள்ளது:
    - ஆயுஷ்மான் பாரத் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள் (AB-HWCs)
    - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (PM-JAY)
- PM-JAY என்பது பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களுக்கு ஒரு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வரையில் இலவச மற்றும் விலை மலிவான ஒரு மருத்துவக் காப்பீட்டு வசதியினை வழங்கும் ஒரு சுகாதார காப்பீட்டுத் திட்டமாகும்.


# இதரச் செய்திகள்

## பகவத் கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம்

- Books or collections of works (eg. *Mahavamsa*, the meticulously kept historical chronicle of Sri Lanka);
- Drawings (eg. Meiji-era collection of Sakubei Yamamoto of Japan);
- Manuscripts (eg. collection of more than 11,000 *Shaiva Siddhanta* manuscripts);
- Audio recordings (eg. 430 hours of recordings of the Frankfurt Auschwitz trials, 1963-65); and
- Video recordings (eg. Bangabandhu Sheikh Mujibur Rahman's historic March 7, 1971 speech).

- பகவத் கீதை மற்றும் பரதரின் நாட்டிய சாஸ்திரம் ஆகியவற்றின் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை இந்த ஆண்டு யுனெஸ்கோவின் உலகப் பதிவேட்டில் (MoW) புதிதாக சேர்க்கப்பட்ட 74 சேர்க்கைகளில் ஒரு பகுதி ஆகும்.

- சமீபத்திய சேர்த்தல்களுடன், இப்பதிவேட்டில் தற்போது 570 உள்ளீடுகள் உள்ளன.
- யுனெஸ்கோ அமைப்பானது, 1992 ஆம் ஆண்டில் Memory of the World (MoW) திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கையெழுத்துப் பிரதிகள், வாய்வழி மரபுகள், ஒலி-ஒளிப் பதிவுகள் மற்றும் நூலகம் மற்றும் ஆவணக் காப்பகப் பதிவுகள் போன்ற பல்வேறு ஆவணங்களின் தொகுப்பை உருவாக்குவது MoW திட்டத்தின் மையத் திட்டமாகும்.
- இவை "உலக முக்கியத்துவம் மற்றும் மிகவும் மகத்தான உலகளாவிய மதிப்பைக் கொண்டவை".
- 1997 ஆம் ஆண்டில் தொடங்கி, 2017 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஒரு நீண்ட இடைவெளியைத் தவிர, இந்தப் பதிவேடு ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டது.
- 1948 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் பிரகடனப் படுத்தப் பட்ட மனித உரிமைகளுக்கான உலகளாவியப் பிரகடனம் ஆனது, இந்தப் பதிவேட்டில் சேர்க்கப்பட்ட புதியப் பதிவுகளில் ஒன்றாகும்.
- கீதை மற்றும் நாட்டிய சாஸ்திரம் ஆகியவை இதில் சேர்க்கப் பட்டதுடன், இந்தப் பதிவேட்டில் இந்தியாவிலிருந்து 14 உள்ளீடுகள் உள்ளன.
- இதில் ரிக் வேதம் (2005 ஆம் ஆண்டு சேர்க்கப் பட்டது) மற்றும் சைவத் தத்துவஞானி அபினவ குப்தாவின் கூட்டுப் படைப்புகள் (2023 ஆம் ஆண்டு சேர்க்கப் பட்டது), 1961 ஆம் ஆண்டில் பெல்கிரேடில் அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாட்டின் பதிவுகள் (2023 ஆம் ஆண்டு சேர்க்கப் பட்டது) கிழக்கிந்திய டச்சு நாட்டு ஆவணக் காப்பகத்தின் பதிவுகள் (2003 ஆம் ஆண்டு சேர்க்கப் பட்டது) ஆகியவை அடங்கும்.
- அக்கடைசி இரண்டு உள்ளீடுகளானது, அல்ஜீரியா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா மற்றும் செர்பியா மற்றும் இந்தோனேசியா, நெதர்லாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் இலங்கை ஆகியவற்றுடன் முறையே இந்தியாவும் அவர்களும் இணைந்து வழங்கிய கூட்டுச் சமர்ப்பிப்புகள் ஆகும்.




- பகவத் கீதை மகாபாரதத்தின் ஒரு பகுதியாகும்.
- இது 18 அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்ட சுமார் 700 நடைகளைக் கொண்ட ஒரு சமஸ்கிருத வேத நூலாகும்.
- அவை மகாபாரத காவியத்தின் ஆறாவது புத்தகத்தில் (பீஷ்ம பர்வம்) பதிக்கப் பட்டு உள்ளன.
- இது கிமு 2 அல்லது 1 ஆம் நூற்றாண்டில் இயற்றப் பட்டதாகக் கருதப்படுகிறது.
- நாட்டிய சாஸ்திரம் ஆனது 36,000 நடைகளைக் கொண்ட நாடகம் (நாட்டியம்), நடிப்பு

(அபிநயம்), அழகியல் உணர்வு வெளிப்பாடு (ரசம்), உணர்வு (பாவம்) மற்றும் இசை (சங்கீதம்) ஆகியவற்றை கையாள்கிறது.

- இது சமஸ்கிருத மொழியில் பரதமுனியால் கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.
- கீதையானது அடிப்படையில், மகாபாரதப் போரின் தொடக்கத்திற்கு சற்று முன்னதாக அர்ஜுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★